கூடுதல்  மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

நாள். 13.06.2022

அ.வ.எண்.  74/2014 வா.சா.1– ரா.மகேஸ்வரன்

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,</u>

<u>3ம் பிரதி வாதி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

நான் வழக்கறிஞர் குமாஸ்தாவாக 1989 வருடம் முதல் வேலை செய்து வருகிறேன். எனக்கு சட்ட ஞானம் உள்ளது என்றால் ஓரளவு உள்ளது.  பத்திரங்கள் படித்து பார்ப்பது, வில்லங்கங்கள் படித்து பார்ப்பது  ஓரளவு தெரியும். வழக்கு சொத்தை தவிர வேறு சொத்தும் வாங்கியுள்ளேன். சொத்துக்கள் வாங்கும் முன்பு சொத்துக்கள் முன் பத்திரங்கள், வில்லங்கங்கள் பார்த்து வாங்குவது வழக்கம் என்றால் சரிதான். சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பு வேறு ஒரு சொத்தை வாங்கினேன். தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு முன் பத்திரங்களை எப்போது பார்த்தீர்கள் என்றால் சுமார் 3, 4 நாட்களுக்கு முன்பு ஆகும்.  கிரையம் வாங்குவதற்கு முன்பு என்ன விதமான பத்திரங்கள் பார்த்தீர்கள் என்றால் ஞாபகம் இல்லை. கிரையத்திற்காக கொடுக்கப்பட்ட தொகை மதிப்பான தொகை தான் என்று சொன்னால் சரிதான். சொத்தை வாங்கும் போது வில்லங்கங்கள் இருக்கிறதா என்று பார்த்து தான் வாங்குவோம் என்று சொன்னால் சரிதான். சொத்து வாங்கும் போது நான் வில்லங்க சான்று எடுத்தேன். அந்த வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நீங்கள் சிவில் சைடு தொழில் செய்து வரும் வழக்கறிஞரிடம் தான் பணி செய்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரிதான். வழக்கில் நீங்கள் என்னனென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்கள் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்யும் போது கூட மேற்கூரிய வில்லங்க சான்றிதழை நீங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தை வாங்குவதற்கு முன்பு அதை சுற்றியுள்ள சொத்தின் உரிமையாளர்களை விசாரித்தீர்களா என்றால் விசாரித்தேன். மேற்படி கூரிய வில்லங்க சான்றிதழில் தாவா 2வது அயிட்ட சொத்தானது 1ம் பிரதிவாதிக்கு கடன் வசூல் தீர்ப்பாயத்தின் மூலமாக ஏலம் எடுத்து அவர் பெயருக்கு 28.05.2010ம் தேதியில் விற்பனை சான்றிதழ் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்படி வில்லங்க சான்றிதழில் பதிவு காணப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் நீங்கள் மேற்படி

வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் வழக்காவணமாக தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. விற்பனை சான்றிதழ் மூலமாக தான் 1ம் பிரதிவாதிக்கு பட்டா வழங்கப்பட்டது என்றும், அதை நீங்கள் வா.சா.ஆ.9 ஆக தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். 1ம் பிரதிவாதிகள் பெயரில் உள்ள தீர்வை ரசீதை வா.சா.ஆ.10 ஆக நீங்கள் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணம் கடன் வசூல் தீர்ப்பாயத்தால் கொடுக்கப்பட்டுள்ள விற்பனை சான்றிதழ் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணங்களை பார்த்த பின்பு தான் நீங்கள் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.8 ஆன கிரைய ஆவணமானது 1ம் பிரதிவாதி கடன் வசூல் தீர்ப்பாயத்தில் இருந்து பெற்ற விற்பனை சான்றிதழுக்கு பின்பு தான் வாங்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே 1ம் பிரதிவாதியின் உரிமை என்னவென்று விவரம் உங்களுக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.5 ஆன ஆவணத்தில் தாவா 2வது அயிட்ட சொத்தை பொறுத்து ரூ.5,25,000/- மதிப்பு போடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த நீதிமன்ற பண ஆள்வரை ரூ.1,00,000/- வரை என்று சொன்னால் சரிதான். நீங்கள் தாவா வழக்கு போட்டிருப்பது ரூ.1,00,000/- மதிப்பு குறைத்து தான் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் எனக்கு அதை பற்றி தெரியாது. நீங்கள் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு 1ம் பிரதிவாதிக்கு எதாவது அறிவிப்பு அனுப்பினீர்களா என்றால் இல்லை. தீர்ப்பாயம் என்பது நீதிமன்றம் ஆகும். நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட விற்பனை ஆவணம் செல்லும் என்று சொன்னால் சரிதான். நீங்கள் கிரையம் வாங்குவதற்கு முன்பே மேற்படி வா.சா.ஆ.5, 9, 10 ஆன ஆவணங்கள் பற்றிய விவரங்கள் தெரியும் என்று சொன்னால் சரியல்ல. தீர்ப்பாயம் கொடுத்த விற்பனை சான்றிதழ் மூலம் பெற்ற கிரையம் செல்லுமா? அல்லது நீங்கள் வாங்கிய கிரையம் செல்லுமா? என்று தான் பிரச்சனை அதனால் தான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் என்னுடைய கிரையம் செல்லும் என்று தான் வழக்கு தாக்கல் செய்தேன். உரிமை பரிகாரம் ஏற்பட்டது என்றால் நீங்கள் என்னுடைய சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் தான் கேட்க வேண்டும் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பிறகு அதன் அடிப்படையில் பட்டா பெற்று தீர்வு செலுத்தி ஆண்டு அனுபவித்து வந்தார் என்றும், பின்பு அவர் இறந்த பிறகு 3ம் பிரதிவாதி ஆண்டு அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7

ஆவணங்களில் உள்ள நபர்கள் 2வது தபசில் சொத்து தகப்பனார் வழியில் வந்த சொத்து என்று சொன்னார்கள். நீங்கள் வா.சா.ஆ.6,7 ஆவணங்கள் குறிப்பிட்ட நபர்கள் முருகனாந்தத்திற்கு  எழுதிக்கொடுத்த பொது அதிகார பத்திரத்தில் 2வது தபசில் சொத்து தகப்பனார் வழியில் வந்த சொத்து என்று கூறியுள்ளார்கள். அவர்களிடம் வாரிசு சான்றிதழ் வாங்கினார்களா என்றால் நான் பார்த்தேன். பொது அதிகார பத்திரம் பதியும் போது உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும் நேரடியாக தெரியாது. நீங்கள் கிரையம் வாங்கும் போது முருகானந்ததிடம் இருந்து வாரிசு சான்றிதழ் கேட்டீர்களா என்றால் நான் பார்த்தேன். உரிமையாளர்களின் சொத்துக்கு வாரிசுதாரர்கள் தான் உரிமையாளர்கள் என்று நிருபிக்கக்கூடிய முக்கியமான ஆவணம் வாரிசு ஆவணம் என்று சொன்னால் சரிதான். நான் முன்பு எஸ்.ஆர்.அன்பரசு என்ற வழக்கறிஞரிடம் குமாஸ்தாவாக வேலை செய்யும் போது 2ம் பிரதிவாதி எனக்கு பழக்கம் என்று சொன்னால் சரிதான். அவருக்காக நாங்கள் வழக்கு நடத்தியுள்ளோம் என்று சொன்னால் சரிதான். 2ம் பிரதிவாதி 2வது அட்டவணை சொத்தில் அவருக்கு ஒருபகுதி உரிமை உள்ளது என்று நீங்கள் கூறியுள்ளீர்கள் 2ம் பிரதிவாதியும் அவரது எதிர் வழக்குரையில் முழுமையாக உரிமை உள்ளது என்று கூறியுள்ளார் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.4ன் அடிப்படையில் 2ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்று நீங்கள் நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு 2ம் அட்டவணை சொத்தை பொறுத்து முழு விவரங்கள் 2009ம் ஆண்டுக்கு முன்பே தெரியும் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதியும், நீங்களும் கூட்டு சதி செய்து தான் 2வது தபசில் சொத்தை மோசடியாக அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தான் உங்கள் பெயரில் கிரைய ஆவணம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. உங்களுக்கு கிரையம் கொடுத்த நபர்களுக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்றும், அவர்களது வாரிசுகளுக்கும் எந்தவிதமான உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2010ம் வருடத்தில் 1ம் பிரதிவாதி பெயரில் விற்பனை ஆவணம் பெறப்பட்டவுடன் 2ம் பிரதிவாதி உங்களை வழக்கின் ஜோடனை செய்து தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. விற்பனை ஆவணம் உங்களுக்கு தெரிந்த பிறகு தீர்ப்பாயத்தில் இது சம்பந்தமாக மனு எதுவும் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் தாக்கல் செய்யவில்லை. உண்மையிலேயே நீங்கள் மதிப்புமிக்க பணத்தை கொடுத்துள்ளீர்கள் என்றால் நீங்கள் சரியான நடவடிக்கை எடுத்திருப்பீர்கள் என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் தீர்ப்பாயத்தில் தாக்கல் செய்துள்ளேன். நீங்கள்

உரிய பரிகாரமான விளம்புகை பரிகாரம் கேட்காமல் பாகபிரிவினை பரிகாரம் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி உங்களை கருவியாக பயன்படுத்தி சொத்தை அபகரிக்க முயற்சி செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது)